"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 5

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________________

### பகுதி -1

**வினாத்தாளில் விடை எழுதுக.**

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. தமிழில் உள்ள உயிரெழுத்துகளின் எண்ணிக்கை
(முப்பது, பன்னிரண்டு, பதினெட்டு)

2. 'காரிருள் அகத்தில் நல்ல…' எனும் பாடலைப் பாடியவர்
(பாரதியார், சோமசுந்தரப்புலவர், பாரதிதாசன்)

3. எலுமிச்சையின் இளையது கன்று அதுபோல தென்னையின் இளையது
(பிள்ளை, குட்டி, வடலி)

4. புதிய அஞ்சல்முறை அறிமுகம் செய்யப்பெற்ற நாடு
(சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, நியூசிலாந்து)

5. சிறந்த ஒழுக்கங்களுள் ஒன்று
(நன்றி மறத்தல், அன்பு செலுத்துதல், பிறருக்கு உதவாமை)

6. மரக்கிளையில் கிளி இருந்தது. இதில் சினைப்பெயர்
(மரம், கிளி, கிளை)

7. அஃறிணைக்கு உரிய பால்கள்
(ஆண்பால் பெண்பால், பலர்பால் பலவின்பால், ஒன்றன்பால் பலவின்பால்)

8. பலாப்பழத்தின் உள்ளீடு
(சதை, முத்து, சுளை)

9. இனியன் நண்பனுக்குத் தோள்கொடுத்தான். இதில் தோள்கொடுத்தல் என்னும் மரபுத்தொடர் குறிப்பது
(உதவி செய்தல், ஏமாற்றுதல், ஏளனம் செய்தல்)

10. ஈழத்தின் முக்கிய வணிகப்பொருள்களுள் ஒன்று
(உருளைக்கிழங்கு, யானைத்தந்தம், சோளம்)

11. உரிச்சொற்களாக அமைவன
(சால உறு, போல ஒப்ப, அந்த இந்த)

12. இளமையில் பச்சை; முதுமையில் சிவப்பு, குணத்தில் எரிப்பு. அது
(வாழைப்பழம், மிளகாய், தக்காளி)

13. நானும் சேயோனும் ஒரே வகுப்பில் படிக்கிறோம். இதில் இடைச்சொல்
(நான், உம், படி)

14. ஆந்தை அலறும் அதுபோல மயில்
(கூவும், பேசும், அகவும்)

15. பூமிக்கும் பகலவனுக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவாக அமைவது
(தீபாவளி, தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு)

16. நான் பள்ளிக்குச் சென்றேன். இவ் வாக்கியத்தின் எழுவாய்
(சென்றேன், பள்ளி, நான்)

17. நிகழ்கால இடைநிலைகள்
(ப் வ், கின்று கிறு, த் ட் ற் இன்)

18. பூக்களிலிருந்து நறுமணம் கமகம என்று வீசியது. இதில் கமகம என்பது
(இரட்டைக்கிளவி, இணைமொழி, அடுக்குமொழி)

19. சாமுவேல் மோர்ஸ் பிறந்த நாடு
(இந்தியா, இத்தாலி, அமெரிக்கா)

20. மாணவர்கள் நீச்சல் போட்டியில் பங்குபற்றினார்கள். மாணவர்கள் என்பது
(தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர்)

(20×1=20 புள்ளிகள்)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. பூங்கா ______________________
2. உள்ளம் ______________________
3. சேவை ______________________
4. விழி ______________________
5. பாட்டு ______________________
6. மகிழ்ச்சி ______________________

(6×1=6 புள்ளிகள்)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. உறக்கம் ______________________
2. புகழ் ______________________
3. அழிவு ______________________
4. அறியாமை ______________________
5. வன்சொல் ______________________
6. இரவு ______________________

(6×1=6 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக.**

1. முத்து + மாலை = ____________________
2. குளிர் + ஆடை = ____________________
3. விண் + ஊர்தி = ____________________
4. கணினி + பொறி = ____________________
5. மூன்று + நூறு = ____________________
6. தோடை + பழம் = ____________________
7. தங்கம் + நகை = ____________________
8. புல் + தரை = ____________________

(8×1=8 புள்ளிகள்)

**5. பிரித்தெழுதுக.**

1. வடகிழக்கு = ________________ + ________________
2. கற்குவியல் = ________________ + ________________
3. கடலலை = ________________ + ________________
4. ஊனுடல் = ________________ + ________________
5. புத்தகக்கடை = ________________ + ________________
6. சொல்லோவியம் = ________________ + ________________
7. மேற்சட்டை = ________________ + ________________
8. தேர்த்திருவிழா = ________________ + ________________

(8×1=8 புள்ளிகள்)

**6. திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| உயிரினும் | கூகையைக் | இகல்வெல்லும் |
| வேண்டும் | ஒழுக்கம் | விழுப்பம் |

1. ஒழுக்கம் ________________ தரலான் ________________

________________ ஓம்பப் படும்.

2. பகல்வெல்லுங் ________________ காக்கை ________________

வேந்தர்க்கு ________________ பொழுது.

(6×1=6 புள்ளிகள்)

**7. பொருத்தமான சொற்களை வைத்து வாக்கியங்களை நிறைவு செய்க.**

| | |
|---|---|
| பேரும் புகழும் | குப்பை கூளங்களை |
| செவிடன் காதில் ஊதிய சங்கு போல | அணைகடந்த வெள்ளம் போல |
| சீராட்டிப் பாராட்டி | இலைமறை காய் போல |

1. தாய் தனது குழந்தையைச் ______________________________ வளர்த்தார்.

2. மாணவர்கள் ஒன்றுசேர்ந்து ____________________________ அகற்றினர்.

3. ஒருவர் தேடிய பணத்தை விட அவருடைய கல்வியால் பெற்ற __________________ என்றும் நிலைத்து நிற்கும்.

4. திறமைசாலிகள் பலர் எம்மிடையே ______________________________ வாழ்ந்து வருகின்றனர்.

5. மாறனுக்குப் பெற்றோர் கூறிய அறிவுரை _______________________________ இருந்தது.

6. முத்தமிழ் விழாவில் மக்கள் கூட்டம் ________________________________ நிரம்பி வழிந்தது.

(6×1=6 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் அட்டவணையை நிறைவு செய்க.**

| இல | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | படித்தேன் | | |
| 2. | | ஓடுகின்றாய் | |
| 3. | | | பறக்கும் |
| 4. | | நீந்துகிறார்கள் | |
| 5. | விளையாடினாள் | | |
| 6. | | | செல்வான் |

(12×½=6 புள்ளிகள்)

**9. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தந்திமுறையைக் கண்டு பிடித்தவர் யார்? (1 புள்ளி)

2. பாரதியாருக்குப் 'பாரதி' என்ற பட்டத்தைச் சூட்டியவர்கள் யாவர்? (1 புள்ளி)

3. 'கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று …' இப்பாடலைப் பாடியவர் யார்? (1 புள்ளி)

4. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை (1 புள்ளி)

5. பெயர்ச்சொல் என்றால் என்ன? ஆறுவகைப் பெயர்ச்சொற்களையும் எழுதுக. (2 புள்ளிகள்)

**10. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 60 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. பாரதியார்
2. தைப்பொங்கல்
3. நீர் பார்த்த விளையாட்டுப்போட்டி

(8 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

‘கண்டதும் கற்கப் பண்டிதனாவான்’ என்பது எம்முன்னோர் கூறிய பழமொழி. ஆமாம் நிறைய வாசிப்பதனால்தான் மனிதன் ஒருவன் நிறைவு அடைகிறான். நல்ல நண்பனைப் போல நல்ல புத்தகமும் எமக்கு நல்வழி புகட்டும். மாணவப்பருவம் கிடைப்பதற்கு அரிய பருவமாகும். அதனால் அப்பருவத்தைப் பயன் உள்ளதாகக் கழிக்க வேண்டும். நல்ல புத்தகங்களைத் தேடிப் பெற்று அவற்றைக் கருத்தூன்றி வாசித்தல் பயன்தரும். பயனுள்ள கருத்துகளைக் குறித்து வைத்துக் கொள்ளல் சாலச்சிறந்தது. அகராதியைப் பயன்படுத்திப் பொருள் தெரியாத சொற்களின் கருத்தை அறிந்து கொள்ளல் அவசியம். பத்திரிகைகள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் எனப் பலவற்றையும் வாசித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். சிறு வயதில் பெறும் இப்பயிற்சியானது வாழ்க்கைக்கு என்றும் கைகொடுக்கும்.

1. மனிதன் எவ்வாறு நிறைவு அடைகிறான்?

   ______________________________

2. எமக்கு நல்வழி புகட்டுபவை எவை?

   ______________________________

3. மனிதனுக்கு கிடைத்தற்கரிய பருவம் எது?

   ______________________________

4. நாம் புத்தகங்களை எவ்வாறு வாசித்தல் பயன்தரும்?

   ______________________________

5. பொருள் தெரியாத சொற்களின் கருத்தை அறிந்து கொள்வது எப்படி?

   ______________________________

6. இப்பந்தியில் கூறப்பெற்றுள்ள பழமொழி யாது?

   ______________________________

(6×1=6 புள்ளிகள்)

## 2. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. நீங்கள் பழச்சாறு குடிக்கிறீர்களா? அல்லது (தேனீர், தேநீர்) குடிக்கிறீர்களா?
2. நேற்றுக் கடும் (மலை, மழை) பெய்தது. அதனால் நாங்கள் சுற்றுலாச் செல்லவில்லை.
3. தமிழினிக்குக் கீரைக் (கறி, கரி) பிடிக்காது. எனினும் அவள் அதனை உண்பாள்.
4. அவள் நன்றாகப் படித்து தேர்வில் சித்தி (பெற்றால், பெற்றாள்)
5. நான் (தோழியின், தோளியின்) வரவுக்காகக் காத்திருந்தேன். ஆனால் அவள் வரவில்லை.
6. எழினி பள்ளிக்கு வரவில்லை ஏனென்றால் அவளுக்குக் (காய்ச்சல், காச்சல்)

(6×1=6 புள்ளிகள்)

## 3. 'அ' பகுதிக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

| (அ) பகுதி | | (ஆ) பகுதி |
|---|---|---|
| 1. விமானத்தைச் செலுத்துபவர் | ( ) | 1. சிற்பி |
| 2. செய்திகளைத் திரட்டித் தருபவர் | ( ) | 2. வியாபாரி |
| 3. பாடல்கள் இயற்றுபவர் | ( ) | 3. இடையர் |
| 4. வாணிபம் செய்பவர் | ( ) | 4. விமானி |
| 5. சிலை செதுக்குபவர் | ( ) | 5. சாரதி |
| 6. ஆடு மாடு மேய்ப்பவர் | ( ) | 6. நிருபர் |
| 7. கப்பல் செலுத்துபவர் | ( ) | 7. மாலுமி |
| 8. வாகனம் ஓட்டுபவர் | ( ) | 8. கவிஞர் |

(8×1=8 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |